©

**தமிழ்நாடு அரசு**
**2009**

**கையெழுத்துத் தொடர்**

# நிதித் (ஒய்வூதியம்) துறை

## அரசாணை எண்.408, நாள் 25–08–2009

*(ஆவணி 9, திருவள்ளுவர் ஆண்டு 2040)*

**ஓய்வூதியம்** – அரசுப் பணியாளர்கள் – அரசுப் பணியில் வரையறுக்கப்படாத பணி (Non-Provincialised Service), தொகுப்பூதியம் (Consolidated Pay), மதிப்பூதியம் (Honorarium), மற்றும் தினக் கூலி (Daily Wages) அடிப்படையில் பணிபுரிந்த பணிக்காலத்தில் பாதியை முறையான பணிக்காலத்துடன் சேர்த்து ஒய்வூதியத்திற்கு எடுத்துக் கொள்வது – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

படிக்கவும்

1. அரசாணை (நிலை) எண்.283, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 15-04-1996
2. அரசாணை (நிலை) எண்.679, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 26-11-1998.
3. அரசுக் கடித எண்.10973/ஒய்வூதியம்/2000–1, நிதித் துறை, நாள் 14–10–2000.

-oOo-

**ஆணை:**

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள் 1978–ன் விதிகள் 2 மற்றும் 11–ன் படி, அரசுப் பணியில் வரையறுக்கப்படாத பணி (Non Provincialised Service), தொகுப்பூதியம் (Consolidated Pay), மதிப்பூதியம் (Honorarium) தினக் கூலி (Daily Wages) அடிப்படையில் பணிபுரிந்த பணிக்காலத்தை ஓய்வூதியப் பயன்களின் கணக்கீட்டிற்கு எடுத்துக் கொள்ள இயலாது. அரசுப் பணியில் வரையறுக்கப்படாத பணி, தொகுப்பூதியம், மதிப்பூதியம் மற்றும் தினக்கூலி அடிப்படையில் பணி புரிந்து 1.4.2003–க்கு முன்னர் நிரந்தரப் பணியில் ஈர்க்கப்பட்டு ஊதிய ஏற்ற முறையில் பணிபுரிந்து ஒய்வுபெறுபவர்கள் மற்றும் தொடர்ந்து பணியிலிருப்பவர்கள் அவர்கள் ஒய்வூதியம் பெற தகுதியான பணிக்காலம் முழு ஒய்வூதியம் பெறுவதற்கு குறைவாக இருப்பதையும், அவர்களது நீண்ட காலப் பணியையும் மனிதாபிமான அடிப்படையில் கருத்தில் கொண்டு அப்பணிக்காலத்தை ஓய்வூதியப் பயன்களின் கணக்கீட்டிற்கு எடுத்துக் கொள்வது தொடர்பாக அரசால் ஆய்வு செய்யப்பட்டது.

**2.** அதன்படி, வரையறுக்கப்படாத பணி (Non Provincialised Service), தொகுப்பூதியம் (Consolidated Pay), மதிப்பூதியம் (Honorarium) மற்றும் தினக் கூலி (Daily Wages) அடிப்படையில் பணிபுரிந்து நிரந்தரப் பணியில் 1.4.2003–க்கு முன்னர் ஈர்க்கப்பட்ட அனைவருக்கும் பொருந்தும் வகையில், அவர்களை நிரந்தரமாகப் பணியில் ஈர்க்கப்படுவதற்கு முன், 1.1.1961–க்குப் பின் பணிபுரிந்த வரையறுக்கப்படாத பணிக்காலம் (Non Provincialised Service), தொகுப்பூதியம் (Consolidated Pay), மதிப்பூதியம் (Honorarium) மற்றும் தினக் கூலி (Daily Wages) அடிப்படையிலான மொத்த பணிக்காலத்தில் பாதியை, அவர்களது ஓய்வூதியத்திற்குத் தகுதியான பணிக்காலத்துடன் சேர்த்து ஓய்வூதியப் பயன்களுக்கு எடுத்துக் கொள்ள, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அரசால் ஆணை வெளியிடப்படுகிறது.

(i) வரையறுக்கப்படாத பணிக்காலம் / தொகுப்பூதியம் / மதிப்பூதியம் / தினக்கூலி அடிப்படையிலான பணிக்காலம் முழுநேர அரசுத் துறை பணிக்காலமாக இருத்தல் வேண்டும்.

(ii) அரசுத் துறைகளில் மாத தொகுப்பூதியம், மதிப்பூதியம் அல்லது தினக்கூலி பெற்று பின்னர் நிரந்தர அரசுப்பணியில் ஈர்க்கப்பட்டு இருக்க வேண்டும்.

(iii) அரசுத் துறையில் நிரந்தரப் பணியிடத்திற்கு பணிமுறிவின்றி 1.4.2003–க்கு முன்னர் ஈர்க்கப்பட்டு இருக்க வேண்டும்.

த.பி,பா.

**3.** இவ்வாணை 1.1.1961–க்கு பின்னர் வரையறுக்கப்படாத பணி / தொகுப்பூதியம் / மதிப்பூதியம் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து, 1.4.2003–க்கு முன்னர் நிரந்தர அரசுப் பணியிடத்தில் ஈர்க்கப்பட்ட அனைவருக்கும் பொருந்தும். மேலும், இவ்வாணை அரசுப் பணியாளர்கள், உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்கள் ஆகியோருக்குப் பொருந்தும்.

**4.** பணிப்பதிவேடு மற்றும் உரிய ஆவணங்களின் அடிப்படையில் மேலே பத்தி 2–ல் உள்ள நிபந்தனைகள் நிறைவு செய்யும் இனங்களில் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களே தகுதிப் பணிக்காலத்தை கணக்கிட்டு மாநிலக் கணக்காயருக்கு ஓய்வூதியப் பயன்களுக்கான முன்மொழிவுகள் அனுப்ப அரசு ஆணையிடுகிறது.

**5.** தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள் 1978–க்கு தக்க திருத்தம் தனியாக வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கு. ஞானதேசிகன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

அனைத்து அரசுச் செயலாளர்கள்.
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள்,
சட்டமன்ற பேரவைச் செயலகம், சென்னை–600 009.
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், சென்னை–600 032.
தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம், 378, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை–600 018.
அனைத்து துறைத் தலைவர்கள்.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத்தொகை), சென்னை– 600 018. (பெயரில்)
மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத்தொகை), சென்னை–600 018.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-I), சென்னை–600 018
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-II), சென்னை–600 018
மாநில கணக்குத் துறைத் தலைவர் (CAB), சென்னை–600 009.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–600 104.
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை–600 002.
மாநகராட்சி ஆணையர், சென்னை/மதுரை/கோயம்புத்தூர்/திருச்சிராப்பள்ளி/சேலம்/ திருநெல்வேலி.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்/மாவட்ட நீதிபதிகள்/முதன்மை நீதித்துறை மாஜிஸ்ட்ரேட்டுகள்.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–600 006.
அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.

நகல் பெறுநர்:

முதலமைச்சர் அலுவலகம் / நிதியமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
நிதி (அநமு I/II/III/பல்வகை) துறை, சென்னை–600 009.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் துறை, சென்னை–600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

25/8/09

பிரிவு அலுவலர்.